## நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்

### வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்

**தேதி 26.07.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் மிதமான மழை பெறப்பட்டது.
2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 16º - 20º செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 10º-12º செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 85-156% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 92% - 93% இருந்தது. காற்றின் வேகம் 18-34 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 27.07.16 | 28.07.16 | 29.07.16 | 30.07.16 | 31.07.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 60 | 10 | 12 | 18 | 18 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் (0 செ.) | 20 | 20 | 20 | 19 | 19 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் (0 செ.) | 12 | 12 | 12 | 11 | 11 |
| மேகமூட்டம் (ஓக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 88 | 88 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 86 | 86 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 22 | 22 | 22 | 22 | 22 |
| காற்றின் திசை | 320 | 320 | 320 | 320 | 320 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் மிதமானது முதல் பலத்த மழை வரை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- ஜீலை மாதம் தேயிலை நாற்றுக்களை நட உரிய தருனமாகும். தோட்டக்கலைத் துறையில் தயாரக உள்ள தேயிலை நாற்றுக்களை மானிய விலையில் பெற்று பயனடைவீர்.
- காரட் பயிரில் ஏக்கருக்கு அடிஉரமாக 78 கிலோ யூரியா, 200 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ பொட்டாஸ் இடவும். மேலுரமாக இதில் பாதி அளவு இடவும்.
- ஏலக்காய் செடிக்கு, ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில், ஏக்கருக்கு, 10 டன் தொழு உரம், 33 கிலோ யூரியா, 84 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 50 கிலோ பொட்டாஸ் உரம் இடவும்.
- கார்னேசன் பயிரில் ப்யூசேரியம் அழுகல் நோயை கட்டுப்படுத்த டெபுகொனோசோல் 50 %, ட்ரைப்ளாக்ஸிஸ்டாரடபிண் 25 % கலவை மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து வேர்பகுதியில் ஊற்றவும்.
- நூற்புழு தாக்குதலை தவிர்க்க, கேரட் பயிரை தொடர்ந்து பயிரிடாமல், மாற்று பயிரை பயிரிட்டு, பயிர் சுழற்சியை மேற்கொள்வது அவசியம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை